5712

நானாற்பது

(மூலமும்-உரையும்)

லெ. இராமநாதன், எம்.ஏ.,
தமிழ்ப் பேராசிரியர்,
24-A, புது வீடு,
கோகலே ஹால் தெரு,
சிவகங்கை - 623 560

உரை ஆசிரியர் :
புலவர். எஸ். நடராசன்,
தலைமைத் தமிழாசிரியர்,
டி. இ. எல். சி. உயர்நிலைப்பள்ளி,
புதுக்கோட்டை.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 17538

மீனாட்சி பதிப்பகம்
புதுக்கோட்டை.

முதற்பதிப்பு - மார்ச்சு - 1961.
உரிமை பதிப்பகத்தாருக்கே.

விலை ரூ. **1-00.**

அச்சிட்டோர்;
செந்தமிழ்ப் பதிப்பகம்,
புதுக்கோட்டை.

லெ. இராமநாதன், எம்.ஏ.,
தமிழ்ப் பேராசிரியர்,
24-A, புது வீதி.
கோகலே ஹால் தெரு.
சிவகங்கை - 623 560.

பதிப்புரை :

'அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே'.

என்ற இன்னுரைக்கேற்ப, நந்தமிழ் நாட்டின் பண்டைய நாவலரும் பாவலரும் நமக்கு எண்ணிலாக் கருத்துக்களை, கருவூலங்களாக அளித்துள்ளனர். அவைகள் எட்டுத் தொகை, பதினெண் கீழ்க் கணக்கு என்பனவாகும். பதினெண்கீழ்க் கணக்கு நூல்களில் நானாற்பதும் ஒன்று. அதனைக் கற்றோரேயன்றி மற்றோரும் அறிந்து இன்புற, தமிழ் மணம் பரவ, இனிய எளிய நடையில் அமைத்துத் தந்துள்ளார், இதன் ஆசிரியர் திரு புலவர் நடராசன் அவர்கள். அவர்களுக்கு எங்கள் நன்றி.

இந்நூலினை யாவரும் படித்துமகிழ, மலிவு விலையில் தமிழ்த்தாயின் திருவடிக்கு எங்களின் மூன்றாவது வெளியீடாக அளிக்கின்றோம். தமிழ் அன்பர்கள் ஆதரவு அளித்து, மேன்மேலும் இவ்வித முயற்சியில் ஈடுற, ஊக்கம் தந்திட வேண்டுகிறோம்.

வணக்கம்.

பதிப்பகத்தார்.

லெ. இராமநாதன், எம்.ஏ.,
தமிழ்ப் பேராசிரியர்,
24-A, புது வீடு,
கோகலே ஹால் தெரு,
சிவகங்கை - 623 560.

57/2

நூலுரை :

இமிழ்கடல் உலகில் அமிழ்தெனச் சிறந்த நம் தமிழ்மொழி, இற்றைக்கு ஈராயிரம் ஆண்டுகட்குமுன் வளமுற்று, வண்ணச் சிறப்புற்று, கற்ருேரும் மற்ருேரும் கவினுற்று, ஈடு எடுப்பின்றியிருந்தது என்பதை எவரும் மறுக்கார்.

அரசன் முதல் அனைவரும் தம் பங்கினைச் சங்க வாயிலாகத் தந்து, தளராது உழைத்து வளர்த்த தமிழ், கடற்கோளினும், தீயினும், இன்னும் பல்வகையானும் ஊறு பல பெற்றும், உச்சநிலையில் திகழ்ந்தது எனின் அது தமிழ் மக்கள் செய்த நற்பயனே யன்றி வேறு யாது?

மொழிபால் கொண்ட ஆர்வம் முன்னிற்க, மக்கள் யாங்ஙனம் பின் செல்ல இயலும்? அவர்கள் போற்றிப் போற்றி வைத்த பொன்னலவோ, இன்று நாம் நலமுற நற்றுணையாய் உளது. நாம் மட்டுமா? நம் பின்னோர்க்கும் அஃது எய்ப்பினில் வைப்பாக இலங்குகின்றது!

சங்கம் வளர்த்தார் நம் முன்னோர், நாம் யாது செய்தோம் என்று சிறிது எண்ணியிருப்பின், இன்றுள்ள தமிழர்நிலை எவ்வளவு சிறந்திருக்கும் என்பதைக் கூறவா வேண்டும்? சென்றதை நினைத்துச் சிந்தை நோவல் விட்டு, சீரும் சிறப்பும் பெறுவோம் என்ற விழிப்புணர்வாவது இன்று பெற்றுள்ளோம். அது தளராது வளரின் தமிழ்வளரும், தமிழர் வளர்வர்.

இந்நிலையில், சங்கம் மருவிய நூல்களில் பதினெண் கீழ்க்கணக்கும் ஒன்று. பல்வேறு காலங்களில் புலவர்கள் பலரால் தனித்தனியாகச் செய்த நூல்களாகும்.

இந்நூல்கள் கி. மு. முதல் நூற்ருண்டுமுதல் கி. பி. 9-ஆம் நூற்ருண்டு முடிய இயற்றப் பெற்றுள்ளன என்பது ஆய்வாளர்களின் முடிவு. இதனில் நானூற்பது என்ற நூல்தொகுதியை எடுத்து, கற்ருேரே அன்றி மற்ருேரும் அறிய, எளியபொருள், இனிய கருத்துரை, தேவைக்கேற்ற விளக்கம், சீரும் தளையும் சிதையா வண்ணம் பிரித்தமைத்துத் தந்துளேன். பாட வேறுபாடுகளேக் களேந்தும், பேராசிரியர் பலரின் திருத்தமும் பெற்று எழுதப்பட்டுளது. ஒவ்வொரு நூலின் முன்னும் நூல்வரலாறு சுருக்கமாக அமைத்துளேன்.

பழைய உரையாசிரியர்களால் போற்றப் பெற்ற இந்நூலுக்கு நல்லிசைப் புலவர் பலரால் உரை கூறப் பட்டிருந்தும், யானும் உரை எழுதி உள்ளேன். இந்நூலினிற் குறைகாணின் அவை என் சிற்றறிவென ஒதுக்கி, குணங்காண விரும்புகின்றேன். இந்நூலே யான் எழுதத் தூண்டு கோலாக இருந்த அன்பர்கள், அவ்வப்போது ஐயம் அகற்றிய பேராசிரியர்கள் யாவருக்கும் என் நன்றி.

இந்நூலினே நன்முறையில் அமைத்துத் தந்த செந்தமிழ் அச்சகத்தாருக்கு நன்றி.

தமிழார்வம் செழித்தோங்க, பல்வகை நிலேயில் நூல்களே வெளியிட்டுவரும் மீனுட்சி பதிப்பகத்தார் இந்நூலினேயும் வெளியிட முன் வந்தமைக்கு, உளம் மகிழ்ந்த நன்றி.

வணக்கம்.

புதுக்கோட்டை.
1—3—61.

எஸ். நடராசன்.

57/2

லெ. இராமநாதன், எம்.ஏ.,
தமிழ்ப் பேராசிரியர்,
24-A, புது வீடு.
கோகலே ஹால் தெரு.
சிவகங்கை - 623 560.

உள்ளுறை

லெ. இராமநாதன், எம்.ஏ.,
தமிழ்ப் பேராசிரியர்,
24-A, [illegible]
கோகலே [illegible]
சிவகங்கை - 623 560.

நாலுநூற்பது

1. இன்னா நாற்பது

நூல் வரலாறு

ஆசிரியர் : **கபிலர்**

நாடு : **பாண்டி நாடு**

காலம் : **கி. பி. 700—725**

பதினெண் கீழ்க் கணக்கில் நாலுநூற்பது என்பது ஒரு பகுதி. இது நான்கு நூல்களைக்கொண்ட ஒரு தொகைப் பெயர். அவை, இன்னா நாற்பது, இனியவை நாற்பது, கார் நாற்பது, களவழி நாற்பது என்பன. இந்நூல்கள் தொல்காப்பியர் கூறியுள்ள எட்டுவகை வனப்பினுள் அம்மை என்பதன் பாற்படும்.

இந்நூலாசிரியர் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலிய சங்கச் செய்யுட்களைப் பாடியவரல்லர். ஏனெனின் சங்க காலக் கபிலர் தன்னை அந்தணன் என்பதும், ஊன், மது முதலியன தனக்கு உடன்பாடு எனக் கூறுவதையும் அறியலாம். ஆனால் இந்நூலாசிரியர் அந்தணரை இழித்துக் கூறுவதையும், ஊன், மது முதலியவற்றைக் கடிதலையும் நோக்க இவர் வேறானவர் எனலாம். இனி கபில தேவர் என்றும் சில ஏடுகளில் காணப்படுகின்றன. ஒருசிலர் கபிலதேவ நாயனாரெனவும் கூறுவர். கபிலதேவரே கபிலதேவநாயனாராக இருக்கலாம். அதனால் இவர் காலம் 10-ம் நூற்றாண்டுக்குப் பின்னராகும். இவர் இயற்றிய இரட்டை மணிமாலை, அந்தாதி, திரிபு, யமகம் முதலியவற்றை நோக்க இவரும் வேறானவர் என்பது வெளிப்படை. ஆகவே இந்நூலாசிரியர் சங்ககாலக் கபிலருக்கும் கபிலதேவ நாயனாருக்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த, கபிலர் என்ற பெயரையுடையவர் என்க.

இவரது நாடு பாண்டிநாடு எனவே பொருந்தும். இவரது நூலினுலோ, பிறவற்ருலோ காண முடியவில்லை. ஆயினும் பதினெண் கீழ்க் கணக்கில் உள்ள ஆசிரியர்கள் பலரின் நாடு பாண்டிநாடாக இருப்பதால் அதனையே இவருக்கும் ஏற்றி அமைக்கப்பட்டது.

கால நிலையை அறிய இவரது கடவுள் வாழ்த்துப்பாடல் உதவி புரிகிறது. இவர் கடவுள் வாழ்த்தில் சிவன், பிரமன், திருமால், முதலிய கடவுள்களை வாழ்த்தியுள்ளார். இதில் பிரமனைக் குறிப்பிட்டிருப்பதால், பிரமனுடைய வணக்கம் தமிழ் நாட்டில் கி. பி. ஏழாம் நூற்ருண்டில் வந்ததாகும். அதனுல் இவரது காலம் கி. பி. எட்டாம் நூற்ருண்டின் முற்பகுதி (கி. பி. 700–725) எனப்பட்டது.

சமயநிலையை அறிய கடவுள் வாழ்த்தே ஏற்றதாக உள்ளது. கடவுள் வாழ்த்தின் முதலில் சிவனைக் குறிப்பதால் இவரைச் சைவ சமயத்தினர் என்பர். ஆனுல் இவர் சிவன், பிரமன், திருமால், முருகன் முதலிய நால்வரையும் கூறுவதால், எல்லா மதமும் சம்மதமாய்க் கொள்ளும் கொள்கையினர் எனக்கொள்ளுதலே ஏற்புடைத்து.

இந்நூல் கடவுள் வாழ்த்தோடு 41 செய்யுட்களையுடையது. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் கடவுள் வாழ்த்துப் பெற்ற நூல்களில் இதுவும் ஒன்று. ஒவ்வொரு செய்யுளும் மூன்று அல்லது நான்கு பொருள்களைப் பெற்றது. மக்கள் நல்வழி வாழ வேண்டி, அவர்க்கு வேண்டாத இன்னுதனவற்றைக் கூறலே இந்நூலின் கருத்தாகும். அதன்படி பொருளையும் எண்ணையும்கொண்டு இந்நூல் 'இன்ஞு நாற்பது' எனப்பட்டது.

இந்நூல் இன்னிசை வெண்பாக்களால் ஆகியது. இதன் கருத்துக்கள் யாவும் தொடர்ந்த பொருளில் உள்ளன அல்ல. இனிய எளிய நடையில் அமைந்துள்ளது. கூறிய கருத்தையே மீண்டும் மீண்டும் வேறு வேறு தொடரில் உரைப்பர். அதனுல் கூறியது கூறல் குற்றமெனக் கொள்ளாது, அதனை வலி யுறுத்த வந்ததாகக் கொள்க. திரண்ட கருத்துக்களைச் சுருங்கச் சொல்லும் பான்மையுடையது. வீர சோழியம் முதலிய நூல்கள் இதனை எடுத்தாண்டு சிறப்புச் செய்துளது.

லெ. இராமநாதன், எம்.ஏ.,
தமிழ்ப் பேராசிரியர்,
24-A புது வீடு,
கோகலே ஹால் தெரு,
சிவகங்கை - 623 560.

கடவுள் வாழ்த்து

சிவனை வணங்கல், நான்முகனை நினைத்தல், திருமாலை மறவாதல், முருகனைப் போற்றல் முதலியவை வேண்டும். இன்றேல் துன்பம்.

முக்கண் பகவன் அடிதொழா தார்க்கின்னா;
பொற்(பு)அன[1] ஊர்தியை உள்ளா(து) ஒழுகின்னா;
சக்கரத் தானை மறப்(பு)இன்னா; ஆங்கின்னா[2]
சத்தியான் தாள்தொழா தார்க்கு.

பதவுரை: முக்கண் - மூன்று கண்களையுடைய, பகவன் - சிவபிரானின், அடி - பாதங்களை, தொழாதார்க்கு - வணங்காதவர்களுக்கு. இன்னா - துன்பமாம்; பொற்பு - அழகிய, அன - அன்னத்தை, ஊர்தியை - வாகனமாகவுடைய நான்முகனை, உள்ளாது - நினையாமல், ஒழுகு - நடத்தல், இன்னா - துன்பமாம்; சக்கரத்தானை - திருமாலினை, மறப்பு - மறத்தல், இன்னா - துன்பமாம்; சத்தியான் - முருகக் கடவுளின், தாள் – பாதங்களை, தொழாதார்க்கு - வணங்காதார்க்கு, இன்னா - துன்பமாகும்.

கருத்துரை: *சிவபிரானை வணங்காதவரும், நான்முகனை நினையாதோரும், திருமாலை மறப்போரும், முருகனைப் போற்றாதாரும் துன்பமுறுவார்களாம்.*

பகவன் - இறைப்பொதுப்பெயர். ஈண்டு முக்கண் என்னும் குறிப்பால் சிவனை உணர்த்திற்று. அன – அன்னம்; இடைக்குறை. சத்தி - வேல், சூலம் முதலியன; அதை உடைய கடவுளுக்காயது.

தந்தையிலாச் சேய்

சுற்றம் சூழ வாழ்தல், கல்வி அளிக்கும் தந்தை, துறவோரின் தனிவாழ்வு, மந்திரம் பலித்தல், இவையின்றேல் துன்பம்.

பந்தம்இல் லாத மனையின் வனப்பின்னா;
தந்தைஇல் லாத புதல்வன் அழகின்னா;
அந்தணர் இல்இருந்(து) ஊண்இன்னா; ஆங்கின்னா
மந்திரம் வாயா விடின். 1

பிறபாடம்: 1. பொற்பன வெள்ளையை, பொற்பன வெள்ளியை, 2. தாங்கின்னா.

ப—ரை: பந்தம் இல்லாத - சுற்றம் இல்லாத, மனையின் - இல்வாழ்க்கையின், வனப்பு - அழகானது (பெருமையானது), இன்னு - துன்பமாம்; தந்தை இல்லாத - பெற்ற தந்தையில்லாத, புதல்வன் - பிள்ளையினது, அழகு - (கல்வி) அழகானது, இன்னு - துன்பமாம்; அந்தணர் - துறவோர், இல் இருந்து - வீட்டிலிருந்து, ஊண் - உணவு உண்ணுதல், இன்னு - துன்பமாம்; ஆங்கு - அவ்வாறே, மந்திரம் - மந்திரங்கள், வாயாவிடின் - பயனளிக்காவிடின், இன்னு - துன்பமாகும்.

க—ரை: சுற்றம் இல்லாத இல்வாழ்க்கை, தந்தையில்லாக் குழந்தையின் கல்வி, துறவோர் வீட்டிலே வாழ்தல், பயன் இல்லா மந்திரங்கள் இவை யாவும் துன்பமாகும்.

பந்தம் - கட்டு; உறவு. அந்தணர் - துறவோர். மந்திரம் - மறைமொழி. இல்வாழ்வான் இனிய சுற்றத்தைக் காவாவழி பெருமையில்லையாம். இதனை ('சுற்றத்தாற் சுற்றப்பட வொழுகல் செல்வத்தான், பெற்றத்தாற் பெற்ற பயன்'- குறள்-524) எனும் கருத்தை நோக்குக. அந்தணர் காட்டினும் நாட்டினும் வாழினும், தனித்து வாழலேயன்றி, ஒருவர் இல்லில் விருந்தினரைப்போல வாழலோ அன்றிக் குடும்பமாய் ஆற்றலோ ஒத்ததல்ல. அவர் இரந்துண்ணலும், உண்ணு நோன்பை மேற்கொள்ளலும், செந்தண்மை பூண்டொழுகலுமே உடையர். மந்திரம் என்பது மந்திரிமுதலியோரின் ஆலோசனைக்குப் பொருந்துமெனினும் கொள்க.

பாலுக்கேற்ற உடை

கோழிபுகும் பார்ப்பார் இல்லம், அடங்காத மனைவி, பகுப்புக்கேற்ற உடை, மக்களைக் காவா மன்னர், இவை யாவும் துன்பம்.

பார்ப்பார்இல் கோழியும் நாயும் புகல்இன்னு;
ஆர்த்த மனைவி அடங்காமை நன்கின்னு;
பாத்தில் புடைவை உடையின்னு; ஆங்கின்னு
காப்பாற்ரு வேந்தன் உலகு. 2

ப—ரை: பார்ப்பார் - பார்ப்பாருடைய, இல் - மனையில், கோழியும் நாயும் —. புகல் - நுழைதல், இன்னு - துன்பமாம்; ஆர்த்த - மணம் செய்த, மனைவி —, அடங்கா - அடங்கி நடவாமை, நன்கு இன்னு - மிகவும் துன்பமாம்; பாத்து - பிரிவு, இல் - இல்லாத, புடைவை - உடையை, உடை - உடுத்தல்,

இன்னு - துன்பமாம்; ஆங்கு - அவ்வாறே, காப்பாற்ரு - (குடிகளைக்) காவாத, வேந்தன் - அரசனுடைய, உலகு - நாடு, இன்னு - துன்பமாகும்.

க-ரை: பார்ப்பார் இல்லில் கோழியும் நாயும் நுழைதலும், அடங்காத மனைவியும், ஆண் பெண் வேற்றுமை அறியா உடை உடுத்தலும், குடிகாவா அரசனும் துன்பந் தருபவையாகும்.

பார்ப்பார் - இல்லிருந்து நல்லன அல்லன கூறுவோர். ஆர்த்தல் – கட்டுதல், ஈண்டு கலியாணத்தை உணர்த்திற்று. பாத்து – பகுத்து என்பதன் மரூஉ. புடைவை - உடை. இக்காலத்தில் பெண்ணுடையைக் குறிக்கும் சொல்லாகியது. தூயோர் இல்லில் தூய்மையில்லாக் கோழியும், நாயும் புகுதல் துன்பந்தரும் என்பதைப் 'பார்ப்பார் இல் கோழியும் நாயும் புகல் இன்னு' என்ருர். பெரும்பாணுற்றுப் படை (299 - 301) அடியை நோக்குக. யாவரும் அறிய ஆரவாரத்துடன் கட்டிய மனைவி என்பதைக் குறிக்க 'ஆர்த்த மனைவி' என்ருர். உடை மாற்றமின்றேல் ஊறு செய்யும் என்பதை விளக்க, 'பாத்தில் புடைவை உடை இன்னு' என்ருர். இது புத்த பிக்ஷு பிக்குணிகளின் உடையணிவதைக் கண்டு போலும். மாற்றுப் புடைவை இல்லாது ஓர் உடையை உடுத்தி வாழ்தல் இன்னு என்றும் கூறுவர்.

அமைதியிலா உயிர்

அநீதியான ஆட்சி, வெள்ளத்தை(கடலை)க் கடத்தல், மொழியாளர் நட்பு, அமைதியிலா உள்ளம் இவை அழிவைத் தரும்.

கொடுங்கோல் மறமன்னர் கீழ்வாழ்தல் இன்னு;
நெடுநீர் புணையின்றி நீந்துதல் இன்னு;
கடுமொழி யாளர் தொடர்(பு)இன்னு; இன்னு
தடுமாறி வாழ்தல் உயிர்க்கு. 3

ப-ரை: கொடுங்கோல் - அநீதியும், மறம் - பாவச் செய்கையையுமுடைய, மன்னர்கீழ் - அரசரது ஆட்சியின்கீழ், வாழ்தல்-வாழ்வது, இன்னு-துன்பமாம்; நெடுநீர்-மிகுந்தநீரை (கடலில்), புணையின்றி - தெப்பமில்லாமல், நீந்துதல் - கடத்தல், இன்னு – துன்பமாம்; கடுமொழியாளர் - வன்சொற்கூறுவோரை, தொடர்பு - நட்டல், இன்னு - துன்பமாம்; உயிர்க்கு -

உயிரையுடைய மக்கள், தடுமாறி - மன அமைதியின்றி, வாழ்தல் - வாழ்வது, இன்னு - துன்பமாகும்.

க-ரை: கொடுங்கோல் மன்னரிடம் வாழ்தலும், வெள்ளத்தை(கடலை)த் தெப்பமின்றிக் கடத்தலும், வன்மொழியாளர் நட்பும், மன அமைதியின்றி வாழ்தலும் துன்பமாகும்.

நெடுநீர் - கடல். தடுமாறி - தடுமாற்றம்; அமைதியின்மை. உயிர் - ஈண்டு மக்கள் உயிரைக் குறித்தது. எப்பொழுதும் கீழான சொற்களைக் கூறுவோரைக் 'கடுமொழியாளர்' என்றார்.

எருது இலா உழவர்

எருது இலா உழவர், போரில் புறங் கொடுக்கும் வீரர், செல்வரைச் சினத்தல், வலியார்க்குத் தீங்கு செய்தல், இவை வருத்தத்தைக் கொடுக்கும்.

எரு(து)இல் உழவர்க்குப் போ(கு)ஈரம் இன்னு;
கருவிகண் மாறிப் புறங்கொடுத்தல் இன்னு;
திருவுடை யாரைச் செறல்இன்னு; இன்னு
பெருவலியார்க்(கு) இன்னு செயல். 4

ப-ரை: எருதுஇல் - எருது இல்லாத, உழவர்க்கு —, ஈரம் - நிலத்தின் ஈரம், போகு - அருகுதல், இன்னு - துன்பமாம்; கருவி - படைகள், கண்மாறி - நிலைதடுமாறி, புறம் கொடுத்தல் - முதுகுகாட்டுதல், இன்னு - துன்பமாம்; திருஉடையாரை - செல்வம் உடையவரை, செறல் - கோபித்தல், இன்னு - துன்பமாம்; பெருவலி யார்க்கு - மிக்க வலியுடையார்க்கு, இன்னு செயல் - தீமையான செயலைச் செய்தல், இன்னு - துன்பமாம்.

க-ரை: ஈரம் காய்முன் உழாத உழவரும், ஆயுதம் கெட முதுகு காட்டி ஓடலும், செல்வரிடம் கோபமுறலும், வலியோர்பால் தீமை புரிதலும் துன்பமாம்.

கருவி - தொகுதி, படையது தொகுதியை உணர்த்திற்று. இப்பொருளைப் (கருவி வானம் 23-4 அடி) பெரும்பாணுற்றுப் படையால் அறிக. கருவிகள் ஒடிந்தும் முறிந்தும் பயனற்றவாதலைக் 'கருவிகண்மாறி' எனினும் பொருந்தும். கண்மாறி - ஒரு சொல். செல்வத்தாலும் பிறவற்றாலும் ஆற்றலுடை யாரைப் 'பெருவலியார் என்றார்.'

வேலியற்ற கரும்பு

வேலியில்லாக் கரும்பு, ஒழுக்குடைய வீடு, முறை யிலா அரசு, ஆராயாத தொழில் இவை யாவும் துன்பங் கொடுக்கும்.

சிறைஇல் கரும்பினைக் காத்(து)ஓம்பல் இன்னா;
உறைசேர் பழங்கூரை சேர்ந்(து)ஒழுகல் இன்னா;
முறையின்றி ஆளும் அர(சு)இன்னா; இன்னா
மறையின்றிச் செய்யும் வினை. 5

ப-ரை: சிறை இல் - வேலி இல்லாத, கரும்பினை - கரும் புப் பயிரை, காத்து ஓம்பல் - பாதுகாத்தல், இன்னா - துன்ப மாம்; உறை - மழைத்துளி, சேர் - பொருந்திய, பழம்கூரை - பழமையான கூரையையுடைய வீட்டில், சேர்ந்து - தொடர்ந்து, ஒழுகல் - வாழ்தல், இன்னா - துன்பமாம்; முறை இன்றி - நீதி இல்லாமல். ஆளும் - ஆளுகின்ற, அரசு - ஆட்சி, இன்னா - துன்பமாம்; மறை இன்றி - (அமைச்சர் முதலியோரின்) ஆலோசனை இல்லாமல், செய்யும் - செய்யப்படும், வினை - தொழில்கள், இன்னா - துன்பமாகும்.

க-ரை: வேலியில்லாக் கரும்புத் தோட்டமும், ஒழுகும் கூரையையுடைய வீடும், முறை இல்லா அரசும், அவை யின்றிச் செய்யும் அரசனின் செயல்களும் துன்பமே கொடுக்கும்.

காத்து ஓம்பல் - ஒருபொருட் பன்மொழி. நாட்படல், சிதைவுறல் முதலியவற்றால் நீர் உள்ளே இறங்கும் நிலை யுடையதை 'உறை சேர் பழங்கூரை' என்றார். மறை - ஆலோசனை. இது பிறர் அறியாவகையில் மறைவிற் செய்யப்படுதலின் இப் பெயர் பெற்றது.

வீரனின் சோம்பல்

அறவோரின் சாபம், வீரன்கொண்ட சோம்பல், இல் லார் இடும் கொடை, தீயோரின் சொல், இவை துன்பம் நல்கும்.

அறமனத்தார் கூறும் கடுமொழியும் இன்னா;
மறமனத்தார் ஞாட்பின் மடிந்(து)ஒழுகல் இன்னா;
இடும்பை உடையார் கொடையின்னா; இன்னா
கொடும்பா(டு) உடையார்வாய்ச் சொல். 6

ப-ரை: அற மனத்தார் - துறவிகள், கூறும் - சொல்லு கின்ற, கடுமொழியும் - கடுஞ்சொல்லும் (சாபமும்), இன்னு - துன்பமாம்; மறம் மனத்தார் - வீரர்கள், ஞாட்பின் - போரில், மடிந்து - சோம்பி, ஒழுகல் - இருத்தல், இன்னு - துன்பமாம்; இடும்பை உடையார் - வறுமையாளரின், கொடை - ஈகைத் தன்மை, இன்னு - துன்பமாம்; கொடும்பாடு உடையார் - (கொடுமையே புரியும்) தீமையாளரது, வாய்ச் சொல் - வாயி லிருந்து வெளிவரும் சொல்லும், இன்னு - துன்பமாகும்.

க-ரை: அறச் செயலே உடையாரின் சாபமும், போரில் வீரத்தைக் காட்டாத வீரனும், பொருள் இல்லாதார் கொடை இயல்பும், கொடுமையாளர் சொல்லும் துன்பம் பயக்குமாம்.

கடுமொழி - கடுஞ்சொல்; சாபம். கொடும்பாடு - கொடுமை; ஒரு சொல். வாய்ச்சொல் - வாய்ச்சொல்லும், எச்சவும்மை தொக்கது. செயல்மட்டும் துன்பமல்ல சொல் லும் துன்பந்தரும் என்பதை வலியுறுத்த, 'வாய்ச்சொல்' என்றார்.

வாசமிலா மலர்

ஆண்மையிலானின் படை, வாசமிலா மலர், தெளிவி லான் துணிவு, பேசும் நிலை அறியான் உரை யாவும் துன்பமே.

ஆற்றல் இலாதான் பிடித்த படையின்னு;
நாற்றம் இலாத மலரின் அழகின்னு:
தேற்றம் இலாதான் துணி(வு)இன்னு; ஆங்கின்னு
மாற்றம் அறியான் உரை. 7

ப-ரை: ஆற்றல் இலாதான் - ஆண்மை இல்லாதவன், பிடித்த - கையிற்பிடித்த, படை - படைக்கருவிகள், இன்னு - துன்பமாம்; நாற்றம் - நறுமணம், இலாத - இல்லாத, மல ரின் அழகு - பூவின் அழகானது, இன்னு - துன்பமாம்; தேற் றம் இலாதான் - தெளிவு இல்லாதவனின், துணிவு - முயற்சி, இன்னு - துன்பமாம்; மாற்றம் - (அவையில்) பேசும் தன்மையை, அறியான் - அறியாதவன், உரை - சொல்லுகின்ற சொல்லா னது, இன்னு - துன்பமாகும்.

க-ரை: கோழை பிடித்த கருவியும், வாசம் இல்லா மலரும், தெளிவு இல்லாதவனின் துணிவும், சொற்கூறு அறியானின் சொல்லும் துன்பமாம்.

நாற்றம் - நறுமணம்; இக்கால வழக்கு துர்நாற்றத்தைக் குறிக்கும். மாற்றம் - பதில் கூறும் செயல், முறை முதலியன. 'ஆற்றல் இலாதான் பிடித்த படை' என்பதைப் 'பகையகத்துப் பேடிகை ஒள்வாள்' (குறள் - 727) என்பதை நோக்குக. தேற்றம்-தேறல்-தெளிவு; ஆராய்ந்து தெளிதல்.

அன்பிலா நண்பர்

பண்பிலா நடுநிலையாளர், அன்பிலா நண்பர், போரில் புறங்காட்டி ஓடல், உதவி இலார் நட்பு, இவை தீமையே.

பகல்போலும் நெஞ்சத்தார் பண்பின்மை இன்னு;
நகையாய நண்பினுர் நாரின்மை இன்னு;
இகலின் எழுந்தவர் ஓட்(டு)இன்னு; இன்னு
நயன்இல் மனத்தவர் நட்பு. 8

ப-ரை. பகல் போலும் - நுகத்தாணிபோலும், நெஞ்சத்தார் - (நடுநிலை) மனத்தினர், பண்பு இன்மை - பண்பில்லாதிருத்தல், இன்னு - துன்பமாம்; நகை ஆய - நகுதலையுடைய, நண்பினுர் - நட்பாளர், நார் இன்மை - அன்பிலாத் தன்மை, இன்னு - துன்பமாம்; இகலின் - போரின்கண், எழுந்தவர் - வீறுடு தோன்றியவர், ஓட்டு - புறங்காட்டி ஓடுதல், இன்னு - துன்பமாம்; நயன் இல் - (பிறருக்கு) நன்மை பயக்காத, மனத்தவர் - நெஞ்சத்தையுடையவரது, நட்பு - சிநேகம், இன்னு - துன்பமாகும்.

க-ரை: நடு நிலையினர் பண்பில்லாதிருத்தலும், நண்பரின் அன்பில்லாச் செயலும், போரில் புறங்காட்டி ஓடுதலும், நன்மையிலாதவர் நட்பும் துன்பமாம்.

பகல் - நுகத்தாணி. நார் - அன்பு. ஓடு - ஒற்று இரட்டியது. 'பகல்போலும் நெஞ்சத்தார்' என்பது 'நெடுநுகத்துப் பகல்போல நடுவுநின்ற நன்நெஞ்சினர்'எனும்பட்டினப்பாலை (207ஆம் அடி)யால் அறிக. இகல் - பகை; அது காரணமாக எழுந்த போருக்காயிற்று. அகத்தில் அன்பின்றி முகத்தில் முறுவல் முதலியன காட்டுதலை, 'நகையாய நண்பினுர் நாரின்மை' என்ருர்.

வள்ளல் இலாப் பரிசிலர்

கள்ளுண்போர்க்குக் கள் கிடைக்காத ஊர், வள்ளல் இலாப் பரிசிலர், ஈகையிலான் அழகு, சேணமிலாக் குதிரையில் செல்லல், இவை யாவும் இன்னு.

கள்இல்லா மூதூர் களிகட்கு நன்கின்னா;
வள்ளல்கள் இன்மை பரிசிலர்க்கு முன்இன்னா;
வண்மை இலாளர் வனப்(பு)இன்னா; ஆங்கின்னா
பண்இல் புரவி பரிப்பு. 9

ப-ரை: கள் இல்லா-கள் கிடைக்காத, மூதூர்-பழமையான ஊர், களிகட்கு - கள்ளுண்டு மகிழ்வோர்க்கு, நன்கு இன்னா - மிகவும் துன்பமாம்; வள்ளல்கள் —, இன்மை - இல்லாதிருத்தல், பரிசிலர்க்கு - பரிசில் பெறும் பாணர் முதலியோர்க்கு, இன்னா - துன்பமாம்; வண்மை இலாளர் - ஈகைத் தன்மை யிலாதார்க்கு, வனப்பு - அழகு, இன்னா - துன்பமாம்; ஆங்கு - அவ்வாறே, பண் இல் - சேணம் இல்லாத, புரவி - குதிரையின் மேல், பரிப்பு - செல்லல், இன்னா - துன்பமாகும்.

க-ரை: குடியர்க்குக் கள் கிடைக்காத ஊரும், வள்ளல் இல்லாத பரிசிலரும், ஈகையிலாளர் அழகும், சேணமில்லாக் குதிரைப் பயணமும் துன்பமாம்.

களி - கள்ளுண்டு களித்தலைக் குறித்தது; இச்சொல் இக்காலம் மகிழ்ச்சியைத் தெரிவிப்பதாயிற்று. பண் - சேணம். பரிப்பு - இயக்கம்; செல்கை. புற அழகு இருந்து பயனில்லை, அகத்தழகு வேண்டும் என்பதை 'வண்மை இலாளர் வனப்பு' என்றார்.

அறியான் முன் பாட்டு

அறியான் முன் பாடும் பாட்டு, இருள்வழித் தனி போதல், கருணையிலாளனிடம் செல்லல், வறுமையாளர் வள்ளன்மை, யாவும் துன்பம்.

பொருள்உணர்வார் இல்வழிப் பாட்டுரைத்தல் இன்னா;
இருள்கூர் சிறுநெறி தாம்தனிப்போக்(கு) இன்னா;
அருள்இல்லார் தங்கண் செலவின்னா; இன்னா
பொருள்இல்லார் வண்மை புரிவு. 10

ப-ரை: பொருள் உணர்வார் - (பாட்டின்) பொருளை அறியும் அறிவுடையார், இல்வழி - இல்லாத இடத்தில், பாட்டு உரைத்தல் - செய்யுளை விளக்கல், இன்னா - துன்பமாம்; இருள் கூர் - இருள்மிகுந்த. சிறுநெறி - சிறிய வழியில், தனிப் போக்கு - தனியாகச் செல்லுதல், இன்னா - துன்பமாம்; அருள் இல்லார் தம்கண் - கருணையிலாதவரிடத்து, செலவு -

செல்லுதல், இன்னு - துன்பமாம்; பொருள் இல்லார் - பொருள் இல்லாதவர், வண்மை - ஈதலே, புரிவு - விரும்புதல், இன்னு - துன்பமாகும்.

க-ரை: அறிவுடையார் இல்லாவிடத்துரைக்கும் பாட்டும், இருளில் தனிவழிச் செல்லலும், அருளில்லாரிடத்துச் செல்லலும், வறுமையாளர் ஈதலர்ற்றும் எண்ணமும் துன்பமாம்.

தாம் தனிப்போக்கு: தாம் - அசை. தம் கண்: தம் - சாரியை. புலவர் அறிவிலாரிடம் சென்று பாடின், அதன் பொருளையுணராமல் வெறுங்கையோடு அனுப்பலும், இகழ்ந்து உரைத்தலும் ஏற்படும் என்பதை, 'பொருள் உணர்வார் இல்வழி' என்றார்.

கடன் கொடுத்தாரைக் காணல்

மனப்பொருத்தம் இல்லா மனைவி, உள்ளமிலார் நட்பு, காமுற்றோர் சேர்க்கை, கடன் கொடுத்தாரைக் காணல், யாவும் துன்பமே.

உடம்பா(டு) இல்லாத மனைவிதோள் இன்னு;
இடன்இல் சிறியாரோ டியாத்தநண்(பு) இன்னு;
இடங்கழி யாளர் தொடர்(பு)இன்னு; இன்னு
கடன்உடையார் காணப் புகல். ***11***

ப-ரை: உடம்பாடு - மனப்பொருத்தம், இலாத – இல்லாத, மனைவிதோள் – மனைவியின் தோளைச் சேர்தல், இன்னு - துன்பமாம்; இடன் இல் - விரிந்த உள்ளம் இல்லாத, சிறியாரோடு - அறிவற்றவரோடு, யாத்த - பிணித்த, நண்பு - நட்பானது, இன்னு - துன்பமாம்; இடங்கழியாளர் - மிக்க காமத்தையுடையாரின், தொடர்பு - நட்பானது, இன்னு - துன்பமாம்; கடன் உடையார் - கடன் கொடுத்தவர், காண - பார்க்குமாறு, புகல் - செல்லுதல், இன்னு - துன்பமாகும்.

க-ரை: அன்பிலா மனைவிபால் சேர்தலும், உள்ளம் இல்லாதவரோடு நட்டலும், காமுற்றோர் நட்பும், கடன் கொடுத்தாரைக் காணலும் துன்பமாம்.

இடன்-உள்ளத்தின் விரிவு. இடங்கழி - மிக்க காமம். உடம்பாடு - மனப்பொருத்தம். 'உடம்பா டிலாத மனைவி தோள் இன்னு' என்பதை 'உடம்பா டிலாதவர் வாழ்க்கை

குடங்கருள் - பாம்போ டுடனுறைந் தற்று' - (குறள் - 890) என்பதால் அறிக. மனைவிதோள்-இடக்கரடக்கல். புகல் - தொழிற்பெயர். சிறியாரோ - டியாத்த : குற்றியலிகரம் அலகு பெறுமை அறிக.

தலைபோகும் சுரம்

உயிர்க்கிறுதி தரும் காடு, எளிதில் கிடைப்பதற்காகப் படும் செருக்கு, புலால் உண்டு வாழ்தல், பெண்ணுறுப்பில் லாள் விருப்பு, இவை இடர்தரும்.

தலைதண்டம் ஆக சுரம்போதல் இன்னா;
வலைசுமந்(து) உண்பான் பெருமிதம் இன்னா;
புலைஉள்ளி வாழ்தல் உயிர்க்(கு)இன்னா; இன்னா
முலைஇல்லாள் பெண்மை விழைவு. 12

ப-ரை: தலை - தலையை, தண்டம் ஆக - தண்டனையாக நேரும், சுரம் போதல் - காட்டினிடைச் செல்லல், இன்னா - துன்பமாம்; வலை சுமந்து - வலையைத் தூக்கி, உண்பான் - (அதனால் மீன் முதலியன பிடித்து) உண்பவனது, பெருமிதம் - செருக்கு, இன்னா - துன்பமாம்; உயிர்க்கு - உயிரையுடைய மக்கள், புலை – புலால் உண்ணுதலை, உள்ளி - விரும்பி, வாழ்தல் - வாழ்வது, இன்னா - துன்பமாம்; முலையில்லாள் - முலை யில்லாதவள், பெண்மை - பெண் தன்மையை, விழைவு - விரும்புதல், இன்னா - துன்பமாகும்.

க-ரை: உயிர்க்குக் கேடு தரும் வழியிற் செல்லலும், மீன் பிடிப்பவனின் செருக்கும், புலால் விரும்புதலும், பெண் உறுப்பில்லாள் விரும்பும் காதலும் துன்பமாம்.

தலை தண்டம் - தலைபோதல். புலை - ஊன். உயிர் - ஈண்டு சிறப்பின்மேல் நின்றது. 'புலை உள்ளி வாழ்தல் உயிர்க்கின்னா' என்பதை 'உண்ணாமை உள்ளது உயிர் நிலை - ஊன் (குறள் - 255) என்ற குறளை நோக்குக. பெண்மை விழைவைக் 'கல்லாதான் சொற்கா முறுதல் முலை யிரண்டும் - இல்லாதாள் பெண்காமுற் றற்று' (குறள்-402) என்பதால் அறிக. இயல்பாகக் கிடைக்கின்றது உண்கின் றேம் என்று செருக்குறலை, 'நெடுங்கடலும் தன்னீர்மை குன்றும்' (குறள் - 17) என்பதால் விலக்க முற்பட லானார்.

நோய்போன்ற மனைவி

மணியிலா யானை, கோழை கூறும் வீரம், பகையரசர் பணிவு, நோய் போன்ற மனைவி, யாவும் துன்பந் தரும்.

மணியிலாக் குஞ்சரம் வேந்(து)ஊர்தல் இன்னா;
துணி(வு)இல்லார் சொல்லும் தறுகண்மை இன்னா;
பணியாத மன்னர்ப் பணி(வு)இன்னா; இன்னா
பிணியன்னார் வாழும் மனை. **13**

ப-ரை: மணி இலா - மணியை அணியாத, குஞ்சரம் - யானையை, வேந்து - அரசன், ஊர்தல் - செலுத்துதல், இன்னா - துன்பமாம்; துணிவு இல்லார் - (பகையை அகற்றும்) துணிவு இல்லாதார், சொல்லும் - கூறும், தறுகண்மை - வீர உரைகள், இன்னா - துன்பமாம்; பணியாத - வணங்காத, மன்னர் - (பகை) அரசர், பணிவு - வணங்குதல், இன்னா - துன்பமாம்; பிணி அன்னார் - (கணவனுக்கு) நோய்போலும் மனைவியர், வாழும் - வாழுகின்ற, மனை - வீடு, இன்னா - துன்பமாகும்.

க-ரை: மணியிலா யானையில் மன்னர் செல்லலும், துணிவிலான் பேசும் வீரமும், பகை மன்னன் வணக்கமும், நோய்போல் துன்பந்தரும் மனைவியும் துன்பமாம்.

மதிப்புடைமைபற்றி, 'மணியிலாக் குஞ்சரம் ஊர்தலைக்' குறித்தார். 'பணியாத மன்னர்ப் பணிவு' தீமை என்பதை, 'சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க' (குறள் - 827) என்பதால் அறிக. நோய்போல் மனத் துன்பம் அளிக்கும் மனைவியை, 'பிணிஅன்னார் வாழும் மனை' எனக் குறிப்பிட்டார்.

அன்புடையாள் பிரிவு

வஞ்சிக்கும் பெண், கனிந்த பழம், அன்புடையாள் பிரிவு, அறிஞர் அறியாவழி, இந்நான்கும் துன்பம்.

வணர்ஒலி ஐம்பாலார் வஞ்சித்தல் இன்னா;
துணர்தூங்கும் மாவின் படுபழம் இன்னா;
புணர்பாவை அன்னார் பிரி(வு)இன்னா; இன்னா
உணர்வார் உணராக் கடை. **14**

ப–ரை: வணர் ஒலி - நெளிவுடன் தழைத்த; ஐம்பாலார் - கூந்தலையுடைய மகளிர், வஞ்சித்தல் - (கணவனை) வஞ்சித்து ஒழுகுதல், இன்னு - துன்பமாம்; துணர்-கொத்தாக, தூங்கும் - தொங்கும், மாவின் - மாமரத்தினது, படுபழம் - மிகக்கனிந்த பழம் (தின்றல்), இன்னு - துன்பமாம்; புணர் - (ஒப்புமையுடன் தனக்கு) இயைந்த, பாவை அன்னுர் - பாவைபோன்ற மனைவியை, பிரிவு - பிரிதல், இன்னு – துன்பமாம்; உணர்வார் - அறியும் தன்மையர் (அறிஞர்), உணராக்கடை-அறியாவிடத்து, இன்னு - துன்பமாகும்.

க–ரை: வஞ்சித்தொழுகும் மனைவியும், மிகக்கனிந்த பழமும், அன்புடைய மனைவியின் பிரிவும், அறிவோர் அறியாவழியும் துன்பமாகும்.

வணர் - வளைவு; நெளிவு. ஐம்பால் - கூந்தலின் ஐந்து பகுப்பினையுடையது; குழல், கொண்டை, சுருள், பனிச்சை, முடி என்பன. படு பழம் - மிகக் கனிந்த பழம். அன்பால் காதலித்த நங்கை என்பதைப் 'புணர்பாவை அன்னுர்' என்ருர். அறிந்து ஆய்ந்து கூறவல்லார் உண்மை அறியாததை, 'உணர்வார் உணராக்கடை' என்ருர்.

பல்லாருள் நாணம்

மணியிலாக் குதிரை, கல்லாரின் கருத்து, இல்லார் விரும்புதல், பல்லார்க்கிடை நாணமுறல், இந்நான்கும் நன்மை தரா.

புல்லார் புரவி மணியின்றி ஊர்(வு)இன்னு;
கல்லார் உரைக்கும் கருமப் பொருள்இன்னு;
இல்லாதார் நல்ல விருப்(பு)இன்னு; ஆங்கின்னு
பல்லாருள் நாணப் படல். 15

ப-ரை: புல்-புல்லை, ஆர்-புசிக்கின்ற, புரவி-குதிரையை, மணி இன்றி - மணியில்லாது, ஊர்வு - செலுத்துதல், இன்னு - துன்பமாம்; கல்லார் உரைக்கும் - அறிவில்லாதார் சொல்லும், கருமம் - காரியத்தின், பொருள் - பயன், இன்னு - துன்பமாம்; இல்லாதார் - வறுமையாளர், நல்ல விருப்பு - சிறந்தவற்றை விரும்பும் விருப்பம், இன்னு - துன்பமாம்; ஆங்கு - அவ்வாறே, பல்லாருள் - பலர்நடுவே, நாணப்படல் - மானக்கேடெய்தல், இன்னு - துன்பமாகும்.

க-ரை: மணியில்லாப் புரவியும், அறிவிலார் சொல்லும் அறவுரையும், இல்லாதார் விரும்பும் பொருளும், பலரிடையில் நாணலும் துன்பமாகும்.

ஊர்வு - ஊர்தல், தொழிற்பெயர். கருமப்பொருள் - காரியத்தின் பயன். படல் - படுதல், தொழிற்பெயர். ஆர் - ஆர்த்தல் - புசித்தல். நடனக்குதிரை சதங்கையின்றி செல்லலை 'மணியின்றி ஊர்வு' என்றார் போலும்.

கண்ணிலான் அழகு

புதைத்து வைக்கும் பொருள், பகையாளர் நட்பு, கண்ணிலான் அழகு, கணக்கறியான் கணக்கு, இவை யாவும் துன்பமே.

உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்(பு)இன்னா;
நண்ணாப் பகைவர் புணர்ச்சி நனியின்னா;
கண்இல் ஒருவன் வனப்(பு)இன்னா; ஆங்கின்னா
எண்இலான் செய்யும் கணக்கு. 16

ப-ரை: உண்ணாது - அநுபவியாது, வைக்கும் - சேர்த்து வைக்கும், பெரும் பொருள் - மிக்க பொருளின், வைப்பு - புதைத்து வைப்பதானது, இன்னா - துன்பமாம்; நண்ணா - உளம் பொருந்தாத, பகைவர் - பகைவரோடு, புணர்ச்சி - சேர்ந்துவாழ்தல், இன்னா - துன்பமாம்; கண்இல் ஒருவன் - கண் இல்லாத ஒருவ(குருட)னின், வனப்பு - அழகானது, இன்னா - துன்பமாம்; ஆங்கு - அவ்வாறே, எண் இலான் - கணக்கறிவிலாதவனால், செய்யும் கணக்கு-செய்யப்படும் கணக்கானது, இன்னா - துன்பமாம்.

க-ரை: உண்ணாது புதைத்து வைக்கும் பொருளும், பகைவரோடு நட்டலும், குருடன் பெற்ற அழகும், எண்ணறிவு இலான் கணக்கும் துன்பமாம்.

வைப்பு - புதைத்து வைப்பது. எண் - கணிதம்; நாலுக்காயிற்று. சோதிடம் முதலியவற்றை விளக்கச் 'செய்யும் கணக்கு' என்றார்.

சான்றோர் முன் பேதை

சான்றோர்முன் பேதைசொல், இருள்வழி செல்வோர், ஒழுக்கமிலார் நோன்பு, தாயைக் காவாதார், இவர் இடர்ப்படுவர்.

ஆன்(று)அவிந்த சான்றோருள் பேதை புகல்இன்னா,
மான்(று)இருண்ட போழ்தின் வழங்கல் பெரி(து)
[இன்னா;
நோன்(று)அவிந்து வாழாதார் நோன்(பு)இன்னா;
ஈன்றாளை ஓம்பா விடல். [ஆங்கின்னா

ப-ரை: ஆன்று - கல்வி கேள்விகளால் நிறைந்து, அவிந்த - அடங்கிய, சான்ரேர் - சிறந்தோர், உள் - நடுவே, பேதை - அறிவிலாதவன், புகல் - சொல்லுதல், இன்னு - துன்பமாம்; மான்று - மயங்கி, இருண்ட - இருண்டுள்ள, போழ்தின்-காலத்தில், வழங்கல்-வழிச் செல்லுதல், பெரிது - மிகவும், இன்னு - துன்பமாம்; நோன்று - (துன்பங்களில்) பொறுத்து, அவிந்து - (மனம்) அடங்கி, வாழாதார் - வாழ மாட்டாதவர், நோன்பு - நோற்றல், இன்னு - துன்பமாம்; ஆங்கு - அவவாறே, ஈன்ருளை-பெற்றதாயை, ஓம்பாவிடல் - காவாது கைவிடுதல், இன்னு - துன்பமாகும்.

க-ரை: சான்ரேரிடம் பேதை சொல்லும் கருத்தும், இருள்வழிச் செல்லலும், ஒழுங்கில்லாதான் ஆற்றும் நோன்பும், தாயைக் காவா தனயனும் துன்பமே.

ஆன்று - ஆகல் என்பதன் மரூஉ; ஆல் எனும் பகுதியடியாகப் பிறந்தது. மான்று - மால் என்பது திரிந்து நின்றது. போழ்து - பொழுது என்பதன் மரூஉ. ஓம்பா - ஓம்பாது, ஈறுகெட்டது. வழங்கல் - செல்லுதல். 'ஆன்றவிந்த சான்ரேர்' என்பது 'ஆன்றவிந்த கொள்கைச் சான்ரேர் பலர் யான் வாழும் ஊரே' - (புறம் - 191) என்பதில் இப்பொருளாதல் அறிக.

அமைதியிலார் நட்பு

அறிவுளான் சோம்பல், படையுடையான் மார்தட்டல், காட்டுவழி போதல், அமைதியிலார் நட்பு யாவும் ஆபத்தை அளிக்கும்.

உரன்உடையான் உள்ளம் மடிந்(து)இருத்தல் இன்ன;
மறனுடை ஆள்உடையான் மார்(பு)ஆர்த்தல் இன்ன;
சுரம்அரிய கானம் செல(வு)இன்ன; இன்ன
மனவறி யாளர் தொடர்பு. 18

ப-ரை: உரன் உடையான் - திண்ணிய அறிவுடையவன், உள்ளம்-மனம், மடிந்து இருத்தல்-சோம்பி இருத்தல், இன்ன- துன்பமாம்; மறனுடை - வீரமுடைய, ஆள் உடையான் - ஆட்களையுடையவன், மார்பு - மார்பைத் தட்டி, ஆர்த்தல் - ஆரவாரித்தல், இன்ன - துன்பமாம்; சுரம் - பாலை நிலத்தின், அரிய - அரிய வழியையுடைய, கானம் - காட்டினுள், செலவு - செல்லுதல், இன்ன - துன்பமாம்; மனம் வறியாளர் - மன நிறைவு இல்லாதவரது, தொடர்பு - இணக்கம், இன்ன - துன்பமாகும்.

க-ரை: அறிவுடையான் சோம்பலும், படைபலத்தால் மார்தட்டலும், அரிய காட்டில் செல்லலும், மனமிலார் நட்பும் துன்பமாம்.

வலியிற் செல்லுதல் கூடாது என்பதை 'மார்பார்த்தல் இன்னு' என்ருர். மனநிறைவு இல்லாதார் (அமைதியிலா தவர்) என்பதை விளக்க, 'மனம் வறியாளர்' என்ருர்.

முளேயாத வித்து

கல்லாத நற்குடி, முளேயாத வித்து, நாணமில்லா நங்கை, பிறகுலத்து மணம் யாவும் இன்பந்தரா.

குலத்துப் பிறந்தவன் கல்லாமை இன்னு;
நிலத்(து)இட்ட நல்வித்து நாருமை இன்னு;
நலத்தகையார் நாணுமை இன்னு;ஆங்(கு) இன்னு
கலத்தல் குலம்இல் வழி. **19**

ப-ரை: குலத்துப் பிறந்தவன் - நல்லகுடியில் பிறந்தவன், கல்லாமை - கல்லாதிருத்தல், இன்னு - துன்பமாம்; நிலத்து இட்ட - பூமியில் விதைத்த, நல்வித்து - நல்ல விதைகள், நாருமை - முளேயாதிருத்தல், இன்னு - துன்பமாம்; நலத்தகை யார் - (பெண்ணிற்குரிய) நல்ல குணத் தகுதியுடையாள், நாணுமை-நாணமின்றியிருத்தல், இன்னு-துன்பமாம்; ஆங்கு- அவ்வாறே, குலம் இல்வழி - பொருந்தாத குலத்தில், கலத்தல் - மணம் செய்தல், இன்னு - துன்பமாகும்.

க-ரை: நற்குடியோன் கல்லாமையும், நல்வித்து முளே யாமையும், நாணமிலா நங்கையும், ஒவ்வாக் குலத்து மணமும் துன்பமாம்.

நாறுதல் - முளேத்தல். கலத்தல் - மணம் செய்து கலத்தல் நாணுடைமை பெண்ணிற்கு இன்றியமையாதது என்பதை 'உயிரினும் சிறந்தன்று நாணே' எனும் (தொல் - பொருள். கற்பியல் - 113) ஆல் அறிக. ஒத்த குடியில் மணத்தலே வலியுறுத்த, 'குலம் இல்வழி, கலத்தல் இன்னு' என்ருர். இதனைப் 'பிறப்பே குடிமை' எனும் (தொல் - மெய்ப்பாட் டியல் 273)ஐ நோக்குக.

மாரிக் குயில்

மாரியில் கூவும் குயிலின் குரலும், கோழை கூறும் வஞ்சினமும், மழையிலா நாடும், முரட்டெருதின் உழவும் துன்பந் தருவன.

மாரிநாள் கூவும் குயிலின் குரல்இன்னா;
வீரம் இலாளர் கடுமொழிக் கூற்(று)இன்னா;
மாரி வளம்பொய்ப்பின் ஊர்க்(கு)இன்னா; ஆங்கின்னா
மூரி எருத்தால் உழவு. 20

ப-ரை: மாரிநாள் - மழைக்காலமாகிய கார்காலத்தில், கூவும் - கூவுகின்ற, குயிலின் குரல் – குயிலின் ஓசை, இன்னா - துன்பமாம்; வீரம் இலாளர் - வீரமில்லாத கோழையரது, கடு மொழிக்கூற்று - வஞ்சினச் சொல்லின் திண்மை, இன்னா - துன்பமாம்; மாரி வளம் பொய்ப்பின் - மழை வளம் குன்று மாயின், ஊர்க்கு - உலகிற்கு, இன்னா - துன்பமாம்; ஆங்கு - அவ்வாறே, மூரி - வலிமையுடைய, எருத்தால் - எருதால், உழவு - உழுதல், இன்னா - துன்பமாகும்.

க-ரை: மாரியில் கூவும் குயில் ஓசையும், வீரமிலான் கூறும் வஞ்சினமும், மழை பொய்த்த உலகும், முரட் டெருதின் உழவும் துன்பந்தருமாம்.

கடுமொழி - வஞ்சினம். மொழிக்கூற்று - ஒருபொருட் பன்மொழி. மூரி - வலிமை; ஈண்டு கட்டுக்கடங்காச் செயலை உணர்த்திற்று. 'மாரி வளம் பொய்ப்பின்' என்பதை 'விண் இன்றி பொய்ப்பின் விரிநீர் வியனுலகத் - துள் நின்று உடற்றும் பசி'- (குறள் - 13) என்பதால் அறிக.

ஓத்திலான் உரை

நிறைவிலார்க் கொடுத்தல், பகுத்தளிக்கான் உணவு, முதுமையில் நோய், வேதம் அறியான் சொல் இவற்றை விரும்பார்.

ஈத்த வகையால் உவவாதார்க்(கு) ஈப்(பு)இன்னா;
பாத்துணல் இல்லார் உழைச்சென்(று)[1] உணல்இன்னா;
மூத்த இடத்துப் பிணியின்னா; ஆங்கின்னா
ஓத்திலாப் பார்ப்பான் உரை. 21

ப-ரை: ஈத்த வகையால் - கொடுக்கப்பட்ட நிலைக்கு, உவவாதார்க்கு - மகிழாதவர்க்கு, ஈப்பு - கொடுத்தல், இன்னா - துன்பமாம்; பாத்து - பகுத்து, உணல் - உண்ணுதல், இல் லார் உழை - இல்லாதவரிடத்து, சென்று - போய், உணல் - உண்ணுதல், இன்னா - துன்பமாம்; மூத்த இடத்து - முதுமைக்

பிறபாடம்: 1. உழைச்சென் றுணவின்னா.

காலத்து, பிணி - நோயுறல், இன்னு - துன்பமாம்; ஆங்கு - அவ்வாறே, ஓத்து இலா - மறைகளை ஓதுதல் இல்லாத, பார்ப்பான் - பார்ப்பாருடைய, உரை - சொல், இன்னு-துன்பமாகும்.

க-ரை: கொடுத்தும் குறைபடுவோருக்குக் கொடுத்தலும், பகுத்துண்ணும் குணமிலானிடம் உண்ணுதலும், முதிர்ந்த வயதில் நோயும், மறை அறியாப் பார்ப்பான் உரையும் பயனில்லாதனவாம்.

ஈத்த - ஈந்த என்பதன் வலித்தல் விகாரம். பாத்து - பகுத்து என்பதன் மரூஉ. ஓத்து - மறை; ஓதப்படுவது. போதுமென்ற மனமிலாதாரை 'ஈத்த வகையால் உவவாதார்' என்றார்.

புளித்த தேன்

யானைப் படையிலா மன்னர், ஊன் உண்ணுவோர், புளித்திட்ட நெய்யும் தேனும், காட்டாற்றிடையுள்ள ஊர், இவை யாவும் துன்பம் பயக்கும்.

யானை இல் மன்னரைக் காண்டல் நனியின்னு;
ஊனைத்தின்(று) ஊனைப் பெருக்குதல் முன்இன்னு;
தேன்நெய் புளிப்பின் சுவையின்னு; ஆங்கின்னு;
கான்யா(று) இடையிட்ட ஊர். **22**

ப-ரை: யானை இல் - யானைப்படை இல்லாத, மன்னரை - அரசரை, காண்டல் - காண்பது, நனி இன்னு - மிகவும் துன்பமாம்; ஊனை-(பிற உயிரின்) ஊனை, தின்று-உண்டு, ஊனை - (தன்) ஊனை, பெருக்குதல் - வளர்த்தல், முன் இன்னு - மிகத் துன்பமாம்; தேன் நெய் - தேனும் நெய்யும், புளிப்பின் - புளித்துவிட்டால், சுவை - (அவற்றின்) சுவைகள், இன்னு - துன்பமாம்; ஆங்கு - அவ்வாறே. கான்யாறு - காட்டாற்றின், இடையிட்ட - இடையிலே உள்ள, ஊர் - ஊரானது, இன்னு - துன்பமாகும்.

க-ரை: யானைப் படையில்லா மன்னரைக் காணுதலும், புலால் உண்ணுதலும், புளிப்பேறிய தேனும் நெய்யும், காட்டாற்றின் இடைப்பட்ட ஊரும் துன்பமாம்.

இடையிட்ட - இரு ஆற்றுக்கிடையில் உள்ளது. தேன் நெய் - எண்ணும்மைத் தொகை; இனிமையான நெய் எனவும் பொருள் கொள்க. ஊனைத் தின்று ஊனைப் பெருக்கு

தல் இன்னு எனுங்கருத்தை 'தன்னூன் பெருக்கற்குத்தான் பிறிது ஊன்உண்பான் - எங்ஙனம் ஆளும் அருள்' (குறள் - 251) என்பதால் அறிக.

காவல் இல்லா கடிநகர்

மதில் இல்லா ஊர்க்காவல், ஆடை கழுவும் துறை, பறைபோல் பரப்புவோர் சொல், ஒழுக்கமிலான் தவம் இவை உயர்வு அளிக்கா.

சிறையில்லா மூதூரின் வாயில்காப்(பு) இன்னு;
துறையிருந்(து) ஆடை கழுவுதல் இன்னு;
அறைபறை அன்னவர்[1] சொல்இன்னு: இன்னு
நிறையில்லான் கொண்ட தவம். 23

ப-ரை: சிறை இல்லா - மதில் இல்லாத, மூதூரின் - பழமையாகிய ஊரினது, வாயில் காப்பு - வாயிலைக் காத்தல், இன்னு - துன்பமாம்; துறை இருந்து - (நீர்த்) துறைக்கண் இருந்து, ஆடை கழுவுதல் - ஆடையைத் தோய்த்து அழுக்கைப் போக்குதல், இன்னு - துன்பமாம்; அறை - ஒலிக்கின்ற, பறை அன்னவர் - பறையைப் போன்றவரின், சொல் - சொல்லானது, இன்னு-துன்பமாம்; நிறை இல்லான்-(பொறிகளைத் தடுத்து தன் வழி) நிறுத்தும் தன்மையில்லாதவன், கொண்ட - கைக்கொண்ட, தவம் - தவமானது, இன்னு - துன்பமாகும்.

க-ரை: மதில் இல்லா நகரின் காப்பும், துறை இடம் ஆடை கழுவலும், பறைபோல் தெரிவிப்போரின் சொல்லும், ஒழுக்கமிலான் தவமும் துன்பமாகும்.

'துறையிருந்து ஆடை கழுவுதல்'- நோய்க்கிருமி முதலியன பரவும் என்பதால் போலும். இரகசியத்தை அம்பலமாக்குவோர் என்பதை, 'அறைபறை அன்னவர்' என்ருர். இதைக் 'கயவர்தாங் கேட்ட மறை பிறர்க்குய்த்துரைக்கலான்' (குறள் - 1076) நோக்குக. நிறை - நிறுத்தல்; ஈண்டு புலன்கள் நிறுத்தலைக் குறித்தது.

அயல்வாழும் தீயோர்

காவலில்லா ஊர், அயல்வாழும் தீயோர், கழிகாமம் உற்ருேர், செருக்குள்ளோர் நட்பு யாவும் துன்பமாம்.

பிறபாடம்: 1 ஆயவர்.

ஏமல்இல் மூதூர் இருத்தல் மிகஇன்னு;
தீமை உடையார் அயல்இருத்தல் நன்(கு)இன்னு;
காமம் முதிரின் உயிர்க்(கு)இன்னு: ஆங்கின்னு
யாம் என்பவரோடு நட்பு. **24**

ப-ரை: ஏமம் இல் - காவல் இல்லாத, மூதூர் - பழைய ஊரிலே, இருத்தல் - வாழ்தல், இன்னு - துன்பமாம்; தீமை உடையார் - தீச்செயல் புரிபவர், அயல் இருத்தல் - பக்கத்தில் வாழ்தல், நன்கு இன்னு - மிகவும் துன்பமாம்; காமம் முதிரின் - காமநோய் முற்றினுல், உயிர்க்கு - , இன்னு - துன்பமாம்; ஆங்கு - அவ்வாறே, யாம் என்பவரோடு - யாம் என்ற செருக்குடையவரோடு புரியும், நட்பு - நட்பானது, இன்னு - துன்பமாகும்.

க-ரை: காவல் இல்லா நகரும், தீயோர் அயலிருத்தலும், காமநோய் மிக்குடையோரும், செருக்குடையோர் நட்பும் துன்பம் பயக்கும்.

ஏமம் - காவல்; ஈண்டு அரசன், மதில் முதலிய காவலைக் குறித்தது.

ஒற்றுமை இல்லா ஊர்

நண்பரின் துயர் காணல், பகையாளர் பெருமிதம், ஒற்றுமை இல்லா ஊர், சூதுவிரும்பல், இவை யாவும் இடர் கொடுக்கும்.

நட்டார் இடுக்கண் [1] *தனிகாண்டல்* [2] *நன்கின்னு;*
ஒட்டார் பெருமிதம் காண்டல் பெரி(து)இன்னு;
கட்(டு)இலா மூதூர் உறைஇன்னு; ஆங்கின்னு
நட்ட கவற்றினுல் சூது. **25**

ப-ரை: நட்டார் - நண்பருடைய, இடுக்கண் - துன்பங்களை, தனி காண்டல் - தனியாகப் பார்த்தல், நன்கு இன்னு - மிகவும் துன்பமாம்; ஒட்டார் - பகைவரது, பெருமிதம் - செருக்கை, காண்டல் - பார்த்தல், பெரிது இன்னு - மிகவும் துன்பமாம்; கட்டு இலா - ஒற்றுமை இல்லாத, மூதூர் - பழைய ஊரில், உறை - வாழ்தல், இன்னு - துன்பமாம்; ஆங்கு - அவ்வாறே, நட்ட - விரும்பப்படுகின்ற, கவற்றினுல் - பாய்ச்சினுல் ஆடும், சூது - சூதாட்டம், இன்னு - துன்பமாகும்.

பிறபாடம்: 1. இடுக்கண்கள் காண்ட நனியின்னு. 2. நனிகாண்டல்

க-ரை: நண்பரின் துன்பத்தைக் காணலும், பகைவரது செருக்கைப் பார்த்தலும், ஒற்றுமையில்லாத ஊரில் வாழ்தலும், சூதாடலை விரும்பலும் துன்பமாகும்.

ஒட்டார் : ஒட்டு + ஆ + ஆர்; பகைவர்; காரணப் பெயர். கட்டு - சுற்றம்; கட்டுப்பாடு; ஒற்றுமை முதலிய பொருளில் பொருந்துவதை ஏற்க. நட்ட - நள் எனும் பகுதியடியாகப் பிறந்த பெயரெச்சம். கவறு - பாய்ச்சி; தாயக்கட்டை. 'நட்ட கவற்றினால் சூது இன்னா' எனும் கருத்தை 'கவறும் கழகமும் கையும் தருக்கி - இவறியார் இல்லாகி யார்'- (குறள் - 935) எனும் கருத்தொடு ஒப்பிடுக. உடுக்கை யிழந்தவன் கைபோல உதவல் வேண்டும் என்பதை வலியுறுத்த 'நட்டார் இடுக்கண் தனிகாண்டல் நன்கின்னா' என்றார்.

பெரியாரைப் பிரிதல்

பெரியாரைப் பிரிதல், அரியவை ஆற்றுமெனல், அன்பிலாரிடம் உரைத்தல், பெரியோர்க்குத் தீமை, புரிதல் இவை யாவும் இன்னாவாம்.

பெரியாரோ டியாத்த தொடர்விடுதல் இன்னா;
அரியவை செய்தும் எனஉரைத்தல் இன்னா;
பரியார்க்குத் தாம்உற்ற கூற்(று)இன்னா; இன்னா
பெரியோர்க்குத்[1] தீய செயல். **26**

ப-ரை: பெரியாரோடு - அறிஞரோடு, யாத்த - கொண்ட, தொடர் - நட்பை, விடுதல் - நீக்கிவிடுதல், இன்னா - துன்பமாம்; அரியவை - அரிய காரியங்களை, செய்தும் - செய்வோம், என உரைத்தல் - என்று சொல்லுதல், இன்னா - துன்பமாம்; பரியார்க்கு - அன்பு இல்லாதவரிடத்து, தாம் உற்ற - தாம் உற்ற துன்பங்களைக் கூறும், கூற்று - சொல், இன்னா - துன்பமாம்; பெரியார்க்கு - பெருமையுடையார்க்கு, தீயசெயல்- தீமையானவற்றைச் செய்தல், இன்னா - துன்பமாகும்.

க-ரை: பெரியோர் நட்பை நீக்குதலும், அரியதை ஆற்றுவம் எனும் ஆணவமும், அன்பிலாரிடம் கூறும் துன்பமும், நல்லோர்க்குப் புரியும் தீமையும் துன்பம் பயக்குமாம்.

பிறபாடம்: 1. பெரியார்

அரியவை - எளியவை அல்லாதவை, 'செயற்கரிய' எனும் (குறள் - 29) பரிமேலழகர் உரை காண்க. பரியார் - எதிர்மறை இடைநிலை புணர்ந்துகெட்டது. செய்தும் - தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்று. 'பெரியாரோடியாத்த'- குற்றியலிகரம் அலகு பெருமை அறிக. சொல்லுதல் எளிது, செய்தல்வேண்டும் என்பதை வலியுறுத்த 'செய்தும் என உரைத்தல் இன்னா' என்றார். எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்-பெரியார்ப் பிழைத்தொழுகுவார்'- (குறள் - 896)எனும் கருத்தை, 'பெரியோர்க்குத் தீய செயல் இன்னா' என்று சுருங்கக் கூறினர்.

இளமையில் மூப்பு

புகழுடையாரை இழிவு செய்தல், உரிமையாரை அகற்றல், வறியரின் வனப்பு, இளமையில் மூப்பு, இவை இன்னாவாம்.

பெருமை உடையாரைப் பீ[டு]அழித்தல் இன்னா;
கிழமை உடையாரைக் கீழ்ந்திடுதல்[1] இன்னா;
வளமை இலாளர் வனப்[பு]இன்னா; இன்னா
இளமையுள் மூப்புப் புகல். 27

ப-ரை: பெருமை உடையாரை - பெருமையுடையவரை, பீடு அழித்தல் - பெருமை அழியக் கூறுதல், இன்னா - துன்பமாம்; கிழமை உடையாரை - உரிமை உடையவரை, கீழ்ந்திடுதல் - நீக்கிவிடுதல், இன்னா - துன்பமாம்; வளமை இலாளர் - செல்வம் இல்லாதவருடைய, வனப்பு - அழகு, இன்னா - துன்பமாம்; இளமையுள் - இளமைப் பருவத்தில், மூப்பு - முதுமைப் பருவத்திற்குரிய செயல்கள், புகல் - உண்டாதல், இன்னா - துன்பமாகும்.

க-ரை: புகழுடையோரைக் குறை கூறுதலும், உரிமையோரை உதறித்தள்ளலும், செல்வமிலாளர் அழகும், இளமையில் மூப்படைதலும் துன்பமாம்.

கிழமையுடையார் - உரிமையுடையார்; நண்பர் சுற்றம் முதலியோர்;-'பழைமை எனப்படுவ தியாதெனின் யாதும் கிழமையைக் கீழ்ந்திடா நட்பு'- (குறள் - 801) என்பதால் அறிக. வளம் - செல்வம் என்பதை 'வளவரை வல்லைக் கெடும்'- (குறள் - 480)ன் உரையால் அறியத்தக்கது. புகல் - தொழிற்பெயர்.

பிறபாடம்: 1. களைந்திடுதல்

கல்லாதான் கூறும் அவை

குதிரையின் குணம் அறியாது ஏறல், கல்லாதான் உரை, எளியோரின் சொற்பயன், அவையில் அறிவிலானின் உரை, இவை துன்பமாம்.

கல்லாதான் ஊரும் கலிமாப் [பரிப்[பு] இன்னா;
வல்லாதான் சொல்லும் உரையின் பயன் இன்னா;
இல்லாதான் வாய்ச்சொல் நயமின்னா; ஆங்கின்னா
கல்லாதான் கோட்டி கொளல். 28

ப-ரை: கல்லாதான் - (செலுத்தவேண்டிய முறையினை) அறியாதவன், ஊரும் - ஏறிச்செல்லும், கலிமா - செருக்குடைய குதிரை, பரிப்பு - (அவனைச்) சுமந்து செல்லுதல், இன்னா - துன்பமாம்; வல்லாதான் - கல்வியில் வல்லமை இல்லாத மூடன், சொல்லும் - சொல்லுகின்ற, உரையின் பயன் - சொல்லின் பொருள், இன்னா - துன்பமாம்; இல்லாதார் - செல்வம் இல்லாதவருடைய, வாய்ச் சொல் - வாயிலிருந்து வரும் சொல்லினது, நயம் - சிறப்பு, இன்னா - துன்பமாம்; ஆங்கு - அவ்வாறே, கல்லாதான் - கல்வி அறிவில்லாதவன், கோட்டி கொளல் - அவையின்கண் பேசுதல், இன்னா - துன்பமாகும்.

க-ரை: செலுத்தும் முறை அறியாது குதிரை ஏறலும், கல்லாதான் கூறும் பொருளும், செல்வமிலான் சொல்லும், மூடன் அவையில் மொழிதலும் துன்பமாம்.

கலி - எழுச்சி; ஆரவாரம். பரிப்பு - சுமத்தல். கோட்டி - அவை. கொளல் - தொழிற்பெயர், ஈண்டு அவையினை அடைந்து பேசுதலைக் குறித்தது. வல்லாதான் - வல்லமையில்லாதவன்; கல்வி, கேள்விகள் மேல் நின்று பொருள் தந்தது.

அறிவிலா மக்களைப் பெறல்

முறை அறியாது பாம்புடன் பழகல், நீரில் குதித்தல், அறிவிலா மக்களைப்பெறல், அடக்கமிலான் இரகசியம், இவை இடர் தரும்.

குறிஅறியான் மாநாகம் ஆட்டுவித்தல் இன்னா;
தறிஅறியான் நீரின்கண் பாய்ந்தாடல் இன்னா;
அறி[வு]அறியா மக்கள் பெறல்இன்னா; இன்னா
செறிவிலான் கேட்ட மறை. 29

ப-ரை: குறி அறியான் - (பாம்பாட்டற்குரிய) முறைகளை அறியாதவன், மாநாகம் - பெரிய பாம்பினை, ஆட்டுவித்தல் - ஆடச் செய்தல், இன்னா - துன்பமாம்; தறி அறியான் - (நீருள் மறைந்துள்ள) கட்டைகளை அறியாதவன், நீரின்கண் - நீரில், பாய்ந்து ஆடல் - குதித்து ஆடல், இன்னா - துன்பமாம்; அறிவு அறியா - அறியவேண்டுவனவற்றை அறியாத, மக்கள்-பிள்ளைகளை, பெறல் - பெறுதல், இன்னா - துன்பமாம்; செறிவு இலான் - அடக்கம் இல்லாதவன், கேட்ட மறை-தான்கேட்ட இரகசியச்சொல், இன்னா - துன்பமாம்.

க-ரை; முறை அறியாமல் பாம்பொடு பழகலும், நீருள் விளையாடலும், அறிவற்ற மக்களைப் பெறலும், அடக்கமிலான்கேட்ட இரகசியமும் துன்பமாம்.

தறி - குற்றி, கட்டை. பாய்ந்தாடல் - குதித்தும் நீந்தியும் மூழ்கியும் விளையாடல். செறிவு - அடக்கம். மறை - இரகசியம்; பிறர் அறியலாகாச் செய்தி. 'மறைபிற ரறியாமை' (கலித்தொகை 133 - 12) என்பதால் அறிக.

யானைமுன் போதல்

நுனிமரத்திலிருந்து குதித்தல், யானை முன் செல்லல், பாம்பு வாழும் வீடு, புலி வாழும் வழிகள், யாவும் துன்பம் கொடுக்கும்.

நெடுமர நீள்கோட்(டு) உயர்பாய்தல் இன்னா;
கடுஞ்சின வேழத்(து) எதிர்சேறல் இன்னா;
ஒடுங்கி அர(வு)உறையும் இல்இன்னா; இன்னா
கடும்புலி வாழும் அதர். *30*

ப-ரை: நெடுமரம் - உயர்ந்த மரத்தினது, நீள்கோட்டு - நீண்ட கிளையின், உயர் - உயரத்திலிருந்து, பாய்தல் - (கீழே) குதித்தல், இன்னா - துன்பமாம்; கடும் சின வேழத்து - மிக்க கோபத்தையுடைய யானையின், எதிர் - எதிராக, சேறல் - செல்லல், இன்னா - துன்பமாம்; அரவு - பாம்பு, ஒடுங்கி - மறைந்து, உறையும் - வாழும், இல் - வீடானது, இன்னா - துன்பமாம்; கடும்புலி - கொடியபுலிகள், வாழும்-வாழுகின்ற, அதர் - (காட்டு) வழிகள், இன்னா - துன்பமாகும்.

க-ரை: மர உச்சியிலிருந்து குதித்தலும், மதயானையின் முன் செல்லலும், பாம்பு வாழும் வீட்டில் இருத்தலும் கடும்புலி வாழும் காடும் துன்பமாம்.

கடும்சினம் - மிக்க கோபத்தைக் குறிப்பினும் மதம் பிடித்த செயலைக் குறிப்பால் உணர்த்திற்று. சேறல் - செல்+தல்; தொழிற்பெயர். கடும்புலி - கொடுந்தன்மை நிறைந்த புலி. 'நீள்கோட்டுயர் பாய்தல்' என்பதைவிட நுனிக்கிளை ஏறலே உயிர்க்கிறுதி 'நுனிக்கொம்பர் ஏறி னார் அஃதிறந் தூக்கின் உயிர்க்கிறுதி யாகி விடும்' (குறள் - 476) என்பதை நோக்குக.

இசை கூடா யாழ்

இசைகூடா யாழொடு பாடல், கணக்கறியான் சோதிடம், நாதமில்லா முழவு, அருள் இல்லான் பகை, யாவும் துன்பம் அளிக்கும்.

பண்அமையா யாழின்கீழ்ப் பாடல் பெரி(து)இன்னா;
எண்அறியா மாந்தர் ஒழுக்குநாள் கூற்(று)இன்னா;
மண்இல் முழவின் ஒலியின்னா; ஆங்கின்னா
தண்மை இலாளர் பகை. 31

ப-ரை: பண் அமையா - இசைகூடாத, யாழின்கீழ் - யாழுடன் இணைந்து, பாடல் - பாடுதல், பெரிது - மிகவும், இன்னா - துன்பமாம்; எண் அறியா மாந்தர் - குறிநூல் (சோதிடம்) அறியாத மக்கள், ஒழுக்கு நாள் - (முகூர்த்தம் சடங்கு முதலிய) ஒழுகுதற்குரிய நல்ல நாட்களை, கூற்று - சொல்லுதல், இன்னா - துன்பமாம்; மண் இல் - மார்ச்சனை இல்லாத, முழவின் - மத்தளத்தினது, ஒலி - ஓசை, இன்னா - துன்பமாம்; ஆங்கு - அவ்வாறே, தண்மை இலாளர் - அருள் இல்லாதவரின்; பகை - பகையானது, இன்னா - துன்பமாகும்.

க-ரை: இசை சேரா யாழுடன் பாடுதலும், கணக்கறியான் கூறும் சோதிடமும், நாதமிலா மத்தளமும், அருள் இலான் பகையும் துன்பந் தருமாம்.

பண் - இசை, சுருதி. பாடல் - தொழிற்பெயர், ஈண்டு இணைந்து பாடுதலைக் குறித்தது. ஒழுக்கு - ஒழுகு; பகுதி இரட்டித்துப் பிறவினையாயது. மண் - மத்தளத் திற்கு இடும் கருஞ்சாந்து; இது நாதம் பெற்று ஓசைதரும். கீழ் - ஏழன் உருபு.

தொன்மையுடையார் கெடல்

தன்னைக் காவாது ஒழுகுதல், புறம் சொல்லல், உதவா தாரை நட்டல், தொன்மையாளர் கெடல், இவை என்றும் தீமையாம்.

தன்னைத்தான் போற்று(து) ஒழுகுதல் நன்(கு)இன்னா;
முன்னை உரையார் புறமொழிக் கூற்(று)இன்னா;
நன்மை இலாளர் தொடர்(பு)இன்னா; ஆங்கின்னா
*தொன்மை உடையார் கெடல். **32***

ப-ரை: தன்னைத்தான் - (ஒருவன்) தன்னைத்தானே, போற்றுது - காத்துக்கொள்ளாது, ஒழுகுதல் – நடத்தல், நன்கு இன்னா - மிகவும் துன்பமாம்; முன்னை உரையார் - நேரில் கூறுமல், புறமொழிக் கூற்று - (புறத்தே பழித்துரைக்கும்) புறம் கூறும் செயல், இன்னா - துன்பமாம்; நன்மை இலாளர் - பிறர்க்கு நன்மை புரியாதவரது, தொடர்பு - நட்பு, இன்னா - துன்பமாம்; ஆங்கு - அவ்வாறே, தொன்மை உடையார் - பழங்குடியில் சிறந்து வருவோர், கெடல் - (செல்வம் முதலியவைகள் இல்லாமல்) கெடுதல், இன்னா - துன்பமாகும்.

க-ரை: தன்னைக் காத்துக்கொள்ளாது நடத்தலும், புறங்கூறலும், உதவி புரியான் உறவும், பழங்குடியினர் கெடலும் துன்பமாகும்.

முன்னை - ஐ பகுதிப்பொருள் விகுதி. உரையார் - முற்றெச்சம். மொழிக்கூற்று-ஒருபொருட் பன்மொழி. கெடல்-(கேடு+அல்) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர். மன மொழி மெய்கள் தீயவழியிற் செல்லாது அடக்குதல் இல்லா வழியைத் 'தன்னைத்தான் போற்றுது' என்றார்.

வஞ்சமனத்தார் தொடர்பு

குடிகாரன் கூறும் நீதி, முள் உள்ள காடு, கரையேறும் விலங்கைக் கொல்லல், வஞ்சமனத்தார் நட்பு, இவை இன்பம் தரா.

கள்உண்பான் கூறும் கருமப் பொருள்இன்னா;
முள்உடைக் காட்டின் நடத்தல் நனியின்னா;
வெள்ளம் படுமாக் கொலையின்னா; ஆங்கின்னா
*கள்ள மனத்தார் தொடர்பு. **33***

ப-ரை: கள் உண்பான் - கட்குடிப்பவன், கூறும் - சொல்லுகின்ற, கருமப் பொருள் - பயன் தரும் மொழி, இன்னா - துன்பமாம்; முள் உடைக் காட்டில் - முள் நிறைந்த காட்டில், நடத்தல் - நடந்து செல்லல், நனி இன்னா - மிகவும் துன்பமாம்; வெள்ளம்படு - வெள்ளத்தில் அகப்பட்ட, மா - விலங்கை, கொலை - கொலை செய்தல், இன்னா - துன்பமாம்; ஆங்கு -

அவ்வாறே, கள்ளம் மனத்தார் - வஞ்ச மனத்தினரது, தொடர்பு - நட்பு, இன்னு - துன்பமாகும்.

க-ரை: கட்குடிப்போன் கூறும் நீதியுரையும், முட்காட்டில் செல்லலும், வெள்ளத்தில் அகப்பட்ட விலங்கைக் கொல்லுதலும், வஞ்சமனத்தார் நட்பும், துன்பமாகும்.

கருமப்பொருள் - பயன்தரும் மொழி. 'மா கொலே'— வெள்ளத்தில் அகப்பட்டு உயிர்க்கு ஊசலாடும் விலங்கைக் கரையேற்றிக் காவாது கொல்லுதல் பாவம் என்பதைக் குறித்தார்.

தீயோர்க்கு உறவாதல்

தீயோர்க்கு உறவாதல், நூல் விரும்பாதார், இழி தொழிலாளர் நட்பு, செல்லாத இடத்திற்குச் செல்லல், இவை துன்பமாம்.

ஒழுக்கம் இலாளர்க்(கு) உற(வு)உரைத்தல் இன்னு;
விழுத்தகு நூலும் விழையாதார்க்(கு) இன்னு;
இழித்த தொழிலவர் நட்(பு)இன்னு; இன்னு
கழிப்புவாய்[1] மண்டிலம் கொட்பு. 34

ப-ரை: ஒழுக்கம் இலாளர்க்கு - நல்லொழுக்கம் இல்லாதவரிடத்து, உறவு உரைத்தல் - (தனக்கு) உறவுமுறையைக் கூறுதல், இன்னு - துன்பமாம்; விழுத்தகு நூலும் - சிறந்த நூலேயும், விழையாதார்க்கு-விரும்பிக் கல்லாதார்க்கு, இன்னு - துன்பமாம்; இழித்த தொழிலவர் - (பிறரால்) இழிவாகக் கருதப்படும் தொழிலேயுடையார், நட்பு - நட்பானது, இன்னு - துன்பமாம்; கழிப்புவாய் - (நல்லோரால்) ஒதுக்கப்பட்ட, மண்டிலம் - நாட்டில், கொட்பு - திரிதல், இன்னு - துன்பமாகும்.

க-ரை: தீயோர்க்கு உறவாதலும், பெருமைதரும் நூலேப் பேணுதார்க்கும், கேவலமான செயலுடையார் நட்பும், ஒதுக்கப்பட்ட இடத்தில் வாழ்தலும் துன்பமாம்.

இழித்த தொழில் - அறிவுடையோரால் பழிக்கப்பட்ட தொழில்; பழிக்கு அஞ்சாச் செயல். கழிப்புவாய் - கழிக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட. மண்டிலம் - நாடு; நாட்டின் பிரிவு.

பிற பாடம்: 1. கழிப்புலாய்

குழவிகொண்ட நோய்

மழை இல்லாதிருத்தல், மரத்திடை ஓசை, குழவி கொண்ட நோய், அழகனின் அறிவின்மை, யாவும் துன்பமே.

எழிலி உறைநீங்கின் ஈண்டையார்க்(கு) இன்னா;
குழலின் இனியமரத்(து) ஓசைநன்(கு) இன்னா;
குழவிகள் உற்ற பிணியின்னா; இன்னா
அழ(கு)உடையான் பேதை யெனல். 35

ப-ரை: எழிலி - மேகமானது, உறை - நீர்த்துளியை, நீங்கின் - சொரியாதாயின், ஈண்டையார்க்கு - இவ்வுலகத்தில் உள்ளவர்களுக்கு, இன்னா - துன்பமாம்; குழலின் இனிய - குழல் ஓசை யைப்போலும் இனிதாக, மரத்தின் ஓசை - மரங்களின் ஓசைஇருப்பினும், நன்கு இன்னா-மிகவும் துன்பமாம்; குழவிகள் உற்ற - குழந்தைகள் அடைந்த, பிணி - நோயானது, இன்னா - துன்பமாம்; அழகு உடையான் - தோற்றத்தில் அழகினை உடையவன், பேதை எனல் - அறிவிலாதவனென்று கூறப்படுதல், இன்னா - துன்பமாகும்.

க-ரை: மழை பெய்யாதிருத்தலும், மரத்தின் ஓசையும், பிள்ளைகளுற்ற பிணியும், அழகுடையானின் அறிவின்மையும் துன்பமாகும்.

உறை - நீர்த்துளி. குழலின் - இன் ஐந்தன் உருபு ஒப்புப் பொருள். அடர்ந்த மரத்தின் ஊடே காற்றுப் புகுந்து எழுப்பும் ஓசை, ஓரோவழிக் குழல் ஓசையைக் காட்டிலும் இனிமை தந்தாலும் அது போற்றப்படுவதில்லை என்பதை, 'குழலின் இனிய மரத்தோசை நன்கின்னா' என்றார்.

கெட்டால் கைவிடும் நண்பர்

ஏழை நினைக்கும் உதவி, கைப்பொருளின்றி கடிநகர் வாழ்தல், எதிர்பார்த்து உண்ணல், தாழ்ந்தபோது உதவா நண்பர், யாவும் துன்பந்தரும்.

பொருள்இலான் வேளாண்மை காமுறுதல் இன்னா;
நெடுமாட நீள்நகர்க் கைத்(து)இன்மை யின்னா;
வருமனை பார்த்(து)இருந்(து) ஊண்இன்னா; இன்னா
கெடும்இடம் கைவிடுவார் நட்பு. 36

ப-ரை: பொருள் இலான் - வறிஞன், வேளாண்மை - (பிறர்க்கு) உதவி புரிதலை, காமுறுதல் - விரும்புதல், இன்னு - துன்பமாம்; நெடுமாடம் - நெடிய மாடங்களையுடைய, நீள் - நகர் - பெரிய நகரத்திலே, கைத்து - பொருள், இன்மை - இன்றியிருத்தல், இன்னு - துன்பமாம்; வருமனை - வரும் மனையுடையாரை, பார்த்து இருந்து - எதிர்பார்த்து இருந்து, ஊண் - உணவு உண்ணுதல், இன்னு - துன்பமாம்; கெடும் இடம் - (வறுமையால்) கெட்ட அமயத்து, கை விடுவார் - கைவிட்டு நீங்குவோரது, நட்பு - நட்பானது, இன்னு - துன்பமாகும்.

க-ரை: வறிஞன் விரும்பும் உபகாரமும், நகரில் பொருளின்றி வாழ்தலும், வீட்டினரை எதிர்பார்த்து உண்ணலும், கெட்டகாலை உதவாத நண்பரும் துன்பமாம்.

வேளாண்மை - உபகாரம். கைத்து - கைப்பொருள். மனை - ஆகுபெயர். இல்லிற்குச் சொந்தமானவர் செவ்வி நோக்கி உண்டல்என்பதை 'வருமனை பார்த்திருந்து ஊண்' எனக் குறித்தார். 'கெடுமிடம் கைவிடுவார் நட்பு' என்பதை, 'கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை – உள்ளினும் உள்ளம் சுடும்'- (குறள் - 799) எனும் கருத்தை நோக்குக.

அழகு மலர்

அழகிருந்து மணமிலா மலர், துறையின்றி நீரில் இறங்கல், அறியானிடம் வினுவல். சிறியார்மேல் செல்லும் சினம் இவை எல்லாம் தீமை.

நறிய மலர்பெரிது நாருமை யின்னு;
துறையறியான் நீர்இழிந்து போகுதல் இன்னு;
அறியான் வினுப்படுதல் இன்னு;ஆங்(கு) இன்னு
சிறியார்மேல் செற்றம் கொளல். 37

ப-ரை: நறிய மலர் - அழகுடைய மலரானது, பெரிது நாருமை - மிகவும் மணம் வீசாதிருத்தல், இன்னு - துன்பமாம்; துறை அறியான்-துறையை அறியாதவன், நீர் இழிந்து போகுதல் - நீரில் இறங்கிச் செல்லுதல், இன்னு - துன்பமாம்; அறியான் - (நூற்கள்) அறியாதவனை, வினுப்படுதல் - (அறிவுடையோரால்) வினுவப் படுதல், இன்னு - துன்பமாம்; ஆங்கு - அவ்வாறே, சிறியார் மேல் - (தனக்குக்) கீழானவரிடத்தில், செற்றம் கொளல் - கோபம் கொள்ளுதல், இன்னு - துன்பமாம்.

க-ரை: அழகிய மலரிலே மணம் இல்லாமையும், துறை அறியாது நீரில் இறங்குதலும், அறியாதவனை அறிவுடையோர் வினவுதலும், தன்னின் கீழோரிடம் கொள்ளும் கோபமும் துன்பந்தரும்.

நறிய - அழகுடைய. துறை – நீர்த்துறை. சிறியார் - வெகுளி முதலியன செல்லுதற்குரிய எளியோர்; வயதில் தனக்குக் கீழானவருமாம்.

திறமிலான் தொழில்

பிறர் மனைவியை நினைத்தல், வீரமிலா மன்னரின் போர், சேணமிலாக் குதிரையேறல், திறமிலான் செய்யும் தொழில் இவை துன்பமே.

பிறன்மனையாள் பின்நோக்கும் பேதைமை யின்னு;
மறம்இலா மன்னர் செருப்புகுதல் இன்னு;
வெறும்புறம் வெம்புரவி ஏற்(று)இன்னு; இன்னு
திறன்இலான் செய்யும் வினை. 38

ப-ரை: பிறன் மனையாள் - பிறனுடைய மனைவியை, பின் நோக்கும் - (காமுற்று) பின்னே தொடரக் கருதும், பேதைமை - அறிவின்மை, இன்னு - துன்பமாம்; மறம் இலா - வீரம் இல்லாத, மன்னர் - அரசர், செரு புகுதல் - போர்க்களம் செல்லுதல், இன்னு - துன்பமாம்; வெம்புரவி - முரட்டுத்தனமுள்ள குதிரையின், புறம் - முதுகின்மேல், வெறும் - (சேணம் முதலிய இல்லாது) வெறுமையாக, ஏறு - ஏறுதல், இன்னு - துன்பமாம்; திறன் இலான் - (அறிந்து ஆற்றும்) திறமை யில்லாதவன், செய்யும் வினை - செய்யும் தொழில், இன்னு - துன்பமாகும்.

க-ரை: பிறன் மனையாளை விரும்புதலும், வீரமிலா மன்னர் போர்க்குச் செல்லலும், சேணமின்றி குதிரை ஏறலும், திறமையிலான் செய்யும் தொழிலும் துன்பமாகும்.

நோக்கம் - விரும்புதல், கருதுதல். வெறும்புறம் - வெற்றுப்புறம்; சேணம் முதலியவை இல்லாத் தன்மை.

கவிக்கு அளிக்காப் பரிசு

இல்லாதவன் இரக்கம், பாக்கினுள் கல், கவிக்கு அளிக்காப் பரிசு, இழிவந்துழி எடுத்துரைக்காப் பாடல் இவை யாவும் இன்னுவாம்.

கொடுக்கும் பொருள்இல்லான் வள்ளன்மை யின்னு;
கடித்(து)அமைந்த பாக்கினுள் கற்படுதல் இன்னு;
கொடுத்து விடாமை கவிக்[கு]இன்னு; இன்னு
மடுத்துழிப் பாடா விடல்.

ப-ரை: கொடுக்கும் - (பிறர்க்குக்) கொடுத்தற்குரிய, பொருள் இல்லான் - பொருள் இல்லாதவனின், வள்ளன்மை - ஈகைத் தன்மை, இன்னு - துன்பமாம்; கடித்து அமைந்த - கடித்தற்கு அமைந்த, பாக்கினுள் - பாக்கில், கல்படுதல் - கல் இருத்தல், இன்னு - துன்பமாம்; கவிக்கு - புலவனுக்கு, கொடுத்து - பரிசில் கொடுத்து, விடாமை - அனுப்பாதிருத்தல், இன்னு - துன்பமாம்; மடுத்துழி - (பரிசு முதலிய பெறுங்கால்) இடையூறு ஏற்பட்டவிடத்து, பாடா - பாடாது, விட்டு - விட்டு விடல், இன்னு - துன்பமாகும்.

க-ரை: ஏழை எண்ணும் ஈகையும், பாக்கில் கல்படுதலும், புலவர்க்குப் பரிசில் கொடாதிருத்தலும், இடையூறு வந்தபோது புலவன் பாடாதிருத்தலும் துன்பந்தரும்.

கடித்து - கடிக்க என்பதன் திரிபு. பாடா - பாடாது; ஈறுகெட்ட எதிர்மறை வினைஎச்சம். மடுத்துழி - உழி - ஏழன் உருபு. தனக்கு வேறொரு புலவனால் இழிவு நேர்ந்த விடத்துப் புலவன் தன் பெருமையை நிலை நாட்டப் பாடா திருத்தல் துன்பம் என்பதை. 'மடுத்துழிப் பாடாவிடல்' என்றார். இதனை நன்னூலார், 'மன்னுடை மன்றத்(து) ஓலைத் தூக்கினும்—தன்னுடை ஆற்றல் உணரார் இடையினும்—மன்னிய அவையிடை வெல்லுறு பொழுதினும்—தன்னை மறுதலை பழித்த காலையும் - தன்னைப் புகழ்தலும் தகும்புல வோற்கே''—சிறப்புப்பாயிரம் 53-ஆம் சூத்திரத் தான் அறிக.

அடங்காதான் சொல்

அடக்கமுடையான் வலிமை, தொழிலில்லான் தற் பெருமை, அடைக்கலப் பொருளை அபகரித்தல், அடங் காதார் சொல், யாவும் இன்பந்தரா.

அடக்கம் உடையவன் மீளிமை இன்னு;
தொடக்கம்[1] இலாதவன் தற்செருக்[கு] இன்னு;
அடைக்கலம் வவ்வுதல் இன்னு; ஆங்கின்னு
அடக்க அடங்காதார் சொல்.

பிறபாடம்: 1. துடக்கம்.

ப-ரை: அடக்கம் உடையவன் - அடக்கமாக வாழ்கின்றவனது, மீளிமை – வலிமை, இன்னு - துன்பமாம்; தொடக்கம் - எத்தொழிலேயும் தொடங்கும், இலாதவன் - முயற்சி இல்லாதவன், தற்செருக்கு - தன்னேயே மதிக்கும் மதிப்பு, இன்னு - துன்பமாம்; அடைக்கலம் - (பிறர்) நம்பிக்கையால் வைத்த பொருளே, வவ்வுதல் - கவர்தல், இன்னு - துன்பமாம்; ஆங்கு - அவ்வாறே, அடக்க - (அறிவுடையோர்) அடக்கவும், அடங்காதார் - அடங்குதல் இல்லாதார்க்கு, சொல் – கூறும் சொல்லானது, இன்னு - துன்பமாகும்.

க-ரை: அடக்கமுடையான் வலிமையும், முயற்சியிலான் செருக்கும், அடைக்கலப் பொருளே வவ்வுதலும், அடங்காதார்க்குக் கூறும் சொல்லும் துன்பத்தைக் கொடுப்பனவாம்.

மீளி - வலிமை; பெருமிதம். அடைக்கலம் - ஆகுபெயர். அடக்கம் உடையானின் அஞ்சாத் தன்மை அவ்வடக்கத்தை அழிக்கும் ஆதலால் 'மீளிமை இன்னு' என்ருர். எத் தொழிலேயும் தொடங்காது வானளாவப் பேசும் தற்பெருமையுடையவனே அறிவிக்கத், 'தொடக்கமிலாதவன் தற்செருக்கு' என்ருர்.
